# அண்ணா பிறந்த நாள்: திமுக, அதிமுகவினர் கொண்டாட்டம்



தருமபுரி நான்கு சாலை சந்திப்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய திமுகவினர். (வலது) மரியாதை செலுத்திய அதிமுகவினர்.

**தருமபுரி, செப். 15:** தருமபுரியில் தமிழக முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாள் விழா திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில் செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில், ராஜகோபால் பூங்கா அருகில் இருந்து நகரச் செயலாளர்கள் நாட்டான் மாது (கிழக்கு), கௌதம் (மேற்கு) ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று நான்கு சாலை சந்திப்பில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினர். இதில், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இதில் முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப் பிரமணி, பி.தர்மச்செல்வன், ஒன்றியச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதேபோல, தருமபுரி மாவட்ட அதிமுக சார்பில் தருமபுரி – திருப்பத்தூர் சாலையில் உள்ள பெரியார் சிலை அருகில் இருந்து மாவட்டச் செயலாளர்கள் டி.ஆர்.அன்பழகன் (மேற்கு), மருத்துவர் ர.அசோகன் (கிழக்கு) ஆகியோர் தலைமையில், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் டி.கே.ராஜேந்திரன், ஜெயலலிதா பேரவை மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல், நகர செயலாளர் பூக்கடை பெ.ரவி ஆகியோர் முன்னிலையில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஊர்வலமாக சென்று நான்கு சாலை சந்திப்பில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதேபோல, திராவிட கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மாவட்டத்தில் பாலக்கோடு, காரிமங்கலம், மாரண்டஅள்ளி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் திமுக, அதிமுக சார்பில் அண்ணா சிலை மற்றும் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

## அரூரில் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் பறிமுதல்: ரூ. 7,500 அபராதம்

**அரூர், செப். 15:** அரூரில் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்திய வணிக நிறுவனங்களுக்கு செவ்வாய்க்கிழமை ரூ. 7,500 அபராதம் விதிக்கப்பட்டது.

அரூர் நகராட்சிக்கு உள்பட்ட பகுதியில், தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்தக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரூர் நகராட்சியின் ஆய்வுக்குழுவினர் பல்வேறு வணிக நிறுவனங்களில் செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்துவது தெரியவந்தது.

இதையடுத்து, தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்திய வணிக நிறுவனங்களுக்கு ரூ. 7,500 அபராதம் விதிக்கப்பட்டது.

தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்துவதையும், விற்பனை செய்வதையும் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் முற்றிலுமாக கைவிட வேண்டும். அரூர் நகராட்சிப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையை உறுதிசெய்யும் வகையில், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களுக்கு எதிரான தொடர் ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் விஜயா ஸ்ரீ தெரிவித்தார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 7,000 கனஅடி

**பென்னாகரம், செப். 15:** ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து செவ்வாய்க்கிழமை விநாடிக்கு 7,000 கனஅடியாக உள்ளது.

கர்நாடகமாநில அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரிநீர் வெளியேற்றப்படுவதன் காரணமாக, காவிரி ஆற்றில் நீர்வரத்து 7,000 கனஅடியாக உள்ளது. காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகமாக உள்ளதால், ஒகேனக்கல்லில் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் விதித்த தடை 4-ஆவது நாளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தின் அளவை தமிழக, கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு பகுதியில் மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

## தருமபுரியில் திடீர் மழை: மக்கள் மகிழ்ச்சி



தருமபுரி நகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த திடீர் மழையால், வாகனப் போக்குவரத்து குறைந்து காணப்பட்ட தருமபுரி – சேலம் பிரதான சாலை.

**தருமபுரி, செப். 15:** தருமபுரியில் கடந்த சில நாள்களாக நிலவிய கடும் வெயிலுக்கு இதமாக செவ்வாய்க்கிழமை இரவு திடீரென மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து சீரான தட்ப வெப்பநிலை நிலவியது.

எல் நினோ தாக்கம் காரணமாக பருவ மழை தவறியதுடன், கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. கடந்த சில நாள்களாக தமிழகத்தில் ஆங்காங்கே பரவலான மழை காணப்பட்டாலும், தருமபுரி மாவட்டத்தைப் பொருத்தவரை கடுமையான வெயில் காணப்பட்டது. என்றாலும், ஆங்காங்கே அவ்வப்போது மேகமூட்டமாகவும், சிலநேரங்களில் சில்லென்ற காற்றும், விட்டுவிட்டு லேசான தூறலும் பெய்து வந்தது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை வெயில் சற்று குறைந்தாலும், வெப்பமாகவே இருந்தது. மாலை மேகமூட்டத்துடன் சில்லென்ற காற்று வீசிய நிலையில், இரவு 7 மணி அளவில் பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் வாகன இயக்கம் குறைந்தது. இந்த திடீர் மழையால் தருமபுரி நகர் பகுதியில் நிலவிய கடுமையான வெப்பநிலை குறைந்து, இரவு சில்லென்ற இதமான சூழல் நிலவியது. இதனால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

இலக்கியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி பகுதியில் வீடுகள், விநாயகர் கோயில் மற்றும் தெருக்களில் மழைநீர் சூழ்ந்தது. சேலம் தேசிய நெடுஞ்சாலையில் இலக்கியம்பட்டி மற்றும் செந்தில் நகர் பகுதியில் துர்வாராததால் கழிவுநீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு, சாலையில் மழைநீருடன் கழிவுநீரும் கலந்து சென்றது.

## விபத்தில் சிக்கிய காரில் 387 கிலோ புகையிலை பொருள்கள்

**கிருஷ்ணகிரி, செப். 15:** மத்தூர் அருகே விபத்தில் சிக்கிய காரிலிருந்து 387 கிலோ புகையிலைப் பொருள்களை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே மாடரஅள்ளி அருகே உள்ள பெருமாள் குப்பம் என்ற இடத்தில் சென்றுகொண்டிருந்த கார் விபத்துக்குள்ளானது. இதைக் கண்ட பொதுமக்கள் அங்கு கூடினர். இந்நிலையில், கார் ஓட்டுநர் அங்கிருந்து தப்பியோடினார்.

தகவல் அறிந்து வந்த மத்தூர் போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், போலி பதிவு எண் கொண்ட காரில், தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை கடத்தியது தெரியவந்தது. இதையடுத்து, கார் மற்றும் ரூ. 3 லட்சம் மதிப்பிலான 387 கிலோ புகையிலைப் பொருள்களை போலீஸார் கைப்பற்றி வழக்குப் பதிந்தனர்.

## அண்ணா பிறந்த நாள்: சர்வதேச இணையவழி கவியரங்கம்

**பென்னாகரம், செப். 15:** பென்னாகரத்தில் கவித்தேடல் பதிப்பகம், ஏரியூர் தமிழ்ச் சங்கம், தகடூர் வாசகர் வட்டம் ஆகியவை சார்பில், அறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு 'அண்ணாவும் தமிழ்நாடும்' என்ற பொருண்மையில் சர்வதேச இணைய வழி கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பென்னாகரத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு தகடூர் வாசகர் வட்டத்தின் நிறுவனர் கூத்தப்பாடி மா.பழனி தலைமை வகித்தார். ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் முதுநிலை தமிழாசிரியர் தகடூர் வெ.சரவணன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மலேசியா நாட்டின் மூத்த கல்வியியல் விரிவுரைஞர் இனியன் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

சென்னை ஜேப்பியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் ப.மணிகண்டன் தலைமையில் 'அண்ணாவும் தமிழ்நாடும்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

முன்னதாக, ஏரியூர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் நா.நாகராஜ் வரவேற்றார். கவித்தேடல் பதிப்பகத்தின் நிறுவனர் கோகுல் காளியப்பன் நன்றி கூறினார். இதில், தமிழகம் முழுவதும் உள்ள கவிஞர்கள் பங்கேற்று கவிதை வாசித்தனர்.


தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
தருமபுரி : 84896 34827
பாலக்கோடு, அரூர், பொம்மிடி : 85081 38448
கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, ஓசூர், பர்கூர் : 99401 44526
உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...
தருமபுரி 98409 31459
அரூர் 94436 19137
கிருஷ்ணகிரி 97866 70077
ஊத்தங்கரை 95438 12474
ஓசூர் 9443041404
பென்னாகரம் 90956 56769



RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்
(RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132
பதிவு அலுவலகம்: 'முதல் தளம், அலுவலக எண்.101, 2E/23, ஜான்சன்ஸ் வீரிவு, புதுதில்லி - 110055
வினை அலுவலகம்: 2வது தளம், 'ஸ்ரீ' கட்டிடம், எண்.9 கண்ணாரி ரோடு, RS புரம், கோயம்புத்தூர்-641002

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு
கடன்பட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன்பட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (சுருக்கமாக 'RFL'), நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான கவாதினத்தில் (Physical Possession) எடுக்கப்பட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் 1.ஸ்ரீ ராமவிலாஸ் ஸரஸ் மில், 2.விஜயகுமார் R, 3.மகாலட்சுமி R, 4.ராமமூர்த்தி A ஆகியோரிடமிருந்து வருவிக்கப்பட வேண்டிய கடன்தொகையான 15.09.2026 அன்றுள்ளபடி ₹ 10,66,75,030.09 (ஞபாய பத்து கோடியே அறுபத்தாறு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து முப்பது மற்றும் பைசா ஒன்பது மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "புகார்கள் ஏற்கப்படமாட்டது" என்ற அடிப்படையில் இ-ஏலம் "Online Electronic Bidding" மூலம் https://www.bankeauctions.com/ என்ற இணையதளத்தில் 13.10.2026 அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை ஒவ்வொரு 5 நிமிட கால இடைவெளியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்
ராசிபுரம் சார்-பதிவாளர் அலுவலகம் எல்லைக்குட்பட்ட, டவுன் சர்வே படி பட்டா எண்.2623, வார்டு C, பிளாக் எண்.10, T.S. எண்.154/1 மற்றும் 154/3, பழைய வார்டு 13, புதிய வார்டு 16, தற்போதைய வார்டு 24 படி, நாராயணன் தெரு, ராசிபுரம் டவுன், நாமக்கல் மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 135'9" அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 135'9" அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 165'3" அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 165'3" அடி, மொத்தம் 23876 சதுர அடி, 165.3 சதுர அடி சுவர் பகுதி, 23876 + 165.3 = செல்வக வடிவம் கொண்ட 24041.03 சதுர அடி நிலம், 5261.6 சதுர அடியில் 1/3 பங்கு பாதை சொத்து (1754 சதுர அடி) 721.11 சதுர அடியில் 1/3 பங்கு பாதை சொத்து (240.37 சதுர அடி) அதனுடன் வழிப்பாதை உரிமைகள். இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: பாலகிருஷ்ணன் 2வது ஜட்டம் சொத்து-க்கு வடக்கு, நாராயணன் தெரு வடக்கு தெற்கு ரோடு மற்றும் சுப்ரமணி ஆசாரி மற்றும் மற்றவர்களின் சொத்திற்கு தெற்கு, பால்ராஜ் மற்றும் மற்றவர்களின் வடக்கு தெற்கு ரோட்டிற்கு மேற்கு, Dr.சௌந்தரராஜன் சொத்து மற்றும் வடக்கு தெற்கு ரோட்டிற்கு கிழக்கு.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 2,65,90,861/-
மற்றும் டேவணித்தொகை (EMD): ₹ 26,59,086/-

இ-ஏல தேதி & நேரம் : 13.10.2026
காலை 10.30 மணியிலிருந்து 11.30 மணி வரை
Portal of E-Auction: https://www.bankeauctions.com/

தொந்த விவரங்கள்
விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநித்துவமும் அளிக்கவில்லை. இச்சொத்து, உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. மேலும், கடன் மீட்பு தீர்ப்பாய சோயம்புத்தூர் முன் நிலுவையில் உள்ள 2025-ம் ஆண்டின் பத்திரமயமாக்கல் விண்ணப்ப எண்.1015 வழக்கில், ஸ்ரீ ராமவிலாஸ் ஸரஸ் மில் எதிராக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் தாக்கல் செய்த மனுவில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டதாக இருக்கும்.

விற்பனையின் பிற விபரங்கள்:
1. விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: https://uat-religarefinvests.webflow.io/auction-notices.
2. இ-ஏலம் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் M/s. C1 India Pvt. Ltd, Mr. தருண் கிருஷ்ணா – Tel. No.: +91 72919 81124 / 25 / 26 மற்றும் Mobile +91 99481 82222; email id – andhra@c1india.com.
3. விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பம் / ஏலம் சமர்ப்பிக்கும் விபரங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mr.K.N.பரமேஷ், Mobile No.89396 05467 மற்றும் Mr.R.மனோஜ் குமார், Mobile No.99404 46070

தேதி : 16.09.2026
இடம் : கோயம்புத்தூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்


## பெயர் மாற்றம்

புஷ்பகுமாரி (PUSHPAKUMARY) க/பெ. ராமச்சந்திரன், பிறந்த நாள் : 20.04.1975, கதவு எண். 8/1, காமராஜர் நகர், 3 கிராஸ், சின்னதிருப்பதி, சேலம் – 636 008 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி வரும் காலங்களில் புஷ்பகுமாரி ராமச்சந்திரன் (PUSHPAKUMARI RAMACHANDRAN) என்று அழைக்கப்படுவேன்.

புஷ்பகுமாரி
சேலம், 08.08.2026


ஸ்ரீ சேலம் டிரேடர்ஸ்
தெ.25, மேயர் நகர், நான்கு ரோடு, சேலம்-7
பழைய கம்ப்யூட்டர் Scrap
பழைய லேப்டாப், பழைய மொபைல்ஸ், பழைய UPS, பேட்டரி
E-Waste வாங்கப்படும்

எந்த நிலையில் இருந்தாலும் எடுத்துக் கொண்டு உடனடி பணம் தரப்படும்
போன் செய்தால் நேரடியாக இல்லம் மற்றும் அலுவலகம் தேடி வந்து வாங்கப்படும்
Cell: 99526-57146


**BEFORE THE HON'BLE ADDITIONAL COMMERCIAL COURT, EGMORE AT CHENNAI**
**C.O.S. No.394 of 2026**

**M/s. Canara Bank,** Represented By Its Manager, GP Road Branch, No.PB 307, 110, General Patters Road, Chennai-600 002 ...Plaintiff

Vs

1. **Mr.Sudhagar Thangaraj (Borrower)** S/o.Mr.Thangaraj, No.3/6 - 114, Mariyamman Kovil, Thuttampatti, Desavilakku, Salem, Tamil Nadu-636 306
2. **Mrs.Kavitha Sakthivel (Co-Borrower)** W/o.Mr.Sudhagar, No.2/44 Panakattur, Pappambadi, Sinnappampatti, Salem, Tamil Nadu-636 306 ...Defendants

Please take notice that the Plaintiff bank has filed Suit under Order XXXVII and Rules 1&2 of the Code of Civil Procedure, 1908 read with Sec.2 (1) C (i) of the Commercial Court act, 2015 for Recovery of money to a tune ₹ **11,68,312/-** together with interest at the rate of 11.65% against the Defendants. The said case came before the Hon'ble Additional Commercial Court, Egmore, at Chennai and was pleased to order Paper Publication against Defendants returnable by **25.09.2026.**

Hence you are hereby requested to appear in person or through Pleader before the said the **Hon'ble Additional Commercial Court, Egmore, at Chennai on 25.09.2026 at 10.00 a.m.** and serve notice of appearance and then file Vakalath and after the service of summons for judgement and you may apply for leave to defend the suit, failing which the above suit will be heard and the same may be decided in your absence

**P.VIJAYALAKSHMI,**
**Counsel for plaintiff**


# வேலை வாய்ப்புகள்

## General

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி வகிவுத் துறை
கார்போரேட் அலுவலம், மும்பை
தொலைபேசி: 022-22820427

ஒப்பந்த அடிப்படையில் சிறப்புப் பிரிவு அலுவலர்கள் பணியமர்த்தம்

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு, தகுதியுடைய இந்தியக் குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

விளம்பர எண் CRPD/SCO/2026-27/21 (ஒப்பந்தப் பதவி)

| பதவியின் பெயர் | காலிப் பணியிடங்கள் | 31.08.2026 அன்றுள்ள வயது (ஆண்டுகள்) அதிகபட்சம் |
|---|---|---|
| குழு சிறுவன்வு (தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி) | 1 | 57 ஆண்டுகள் |

ஆன்லைனில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் ஆன்லைனில் விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, தகுதி, அனுபவம், முந்தைய பணி போன்ற பிற விவரங்கள்), காலிப் பணியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் https://sbi.bank.in/web/careers/current-openings வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் அதிகாரப்பூர்வ (https://bank.sbi/web/careers/post-your-query) வலைதளத்திலுள்ள "CONTACT US" —> "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 04.09.2026–லிருந்து 24.09.2026 வரை.

இடம்: மும்பை
தேதி : 04.09.2026
பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிளம்)

Repco Home Finance
ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
தர்மபுரி கிளை: கதவு எண்.203/39E1, முதல் தளம், அதியமான் பைபாஸ் ரோடு (தர்மபுரி வாட்ஸ் அருகில்), தர்மபுரி – 636701

இ - ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் வம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்

கடன்தாரர்: Mrs.தன்மொழி M, W/o.Mr.சௌந்தரராஜன், சக-கடன்தாரர்கள்: 1.Mr.நடராஜன்.S, S/o.Mr.சௌந்தராஜன், 2.Mr.ஆனந்தராஜன்.S, S/o.Mr.சௌந்தராஜன், 3.Mrs.அனிதா.R, W/o.Mr.ஆனந்தராஜன், 4.Mrs.ஐஸ்வர்யா.N, W/o.Mr.நடராஜன், ஜாமீன்தாரர்: Mr.கப்பிரமணி.S, S/o.Mr.சிவகுமார்.S, ஆகியோர் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், தர்மபுரி கினை-ல் கீழ்க்கண்ட அசையா சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். நிறுவனமானது கடன் கணக்கு எண். AHL10010237008538-ன் கீழ் கடன் தொகையான 20.02.2026 அன்றுள்ளபடி ₹ 13,70,302/- மற்றும் வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு SARFAESI-சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ் 24.02.2026 அன்று மேற்கண்டவர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பியது.

கடன்தாரர் & சக-கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்டுள்ள நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் நிறுவனமானது மீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்தினை சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் 14.05.2026 அன்று வைதீகம் எடுத்துக்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து, சொத்தை ஈடாக பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான (Secured Creditor) ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனமானது கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்துக்களை "எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையிலும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற வகையிலும் ("as is where is" & "as is what is" condition) SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் சொத்து மீதான கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிமுறைகள், 2002, விதி எண் 8 & 9-ன் படியும் விற்பனை செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது. கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன் கணக்கு எண். AHL10010237008538-ன் கீழ் 09.09.2026 அன்றுள்ளபடி ₹ 13,55,203/-ஆகும்.

இ-ஏல தேதி & நேரம்: 28.10.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
விற்பனை முடியும் வரை தனா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையற்ற நீட்டிப்புகள் அறுமதிக்கப்படும்

இ-டெண்டரை சமர்ப்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 27.10.2026 மாலை 4.00 மணிக்கு

அசையா சொத்து விவரம்: தர்மபுரி பதிவு மாவட்டம், தர்மபுரி மேற்கு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.465, பட்டா எண்.115 படி பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.465/58, தடங்கம் கிராமம், நல்லம்பள்ளி தாலுகா, தர்மபுரி மாவட்டம் என்னும் முகவரியில் 225 சதுர மீட்டர் நிலம், பதிப்பீடு Rs.3.00, இதில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 18.2 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 18.2 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 6.6 மீட்டர், தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 6.6 மீட்டர் ஆகபொத்தம் 120.12 சதுர மீட்டர் நிலம், அதிலுள்ள வரவிருக்கிற RCC தளம் போட்ட கட்டிடம், அதனுடன் பொதுவான வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: Mr.ஆட்டுக்காரன் என்கிற பெருமாள் நிலம், மேற்கு: ரோடு, கிழக்கு: Mr.சிவமணி-க்கு சொந்தமான நிலம், தெற்கு: Mrs.தனம்மாள்-க்கு சொந்தமான மீதமுள்ள நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 30,19,000/- EMD ₹ 3,01,900/- முன்னுரைத்த ஏல உயர்வுத்தொகை ₹ 30,000/-

இ-ஏல நடைமுறைக்கு தொடர்புகொள்ள வேண்டிய நபர்: M/s.4 Closure - Mr.T.ஜெய பிரகாஷ் ரெட்டி - 814200 0064. சொத்தினை பார்வையிட, ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கினை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், தர்மபுரி கினை தொடர்பு எண். 04342270633 & 8939892822 என்ற எண்களில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 10.09.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

காவேரி மருத்துவமனை



ஒவ்வொரு இதயமும் ஒரு நம்பிக்கையின் கதை

காவேரி மருத்துவமனை, ஓசூரில் மேற்கொள்ளப்பட்ட இதய சிகிச்சைகள் மூலம் 10,000 -க்கும் மேற்பட்ட உயிர்கள் வெற்றிகரமாக காப்பாற்றப்பட்டு புதிய நம்பிக்கையை பெற்றுள்ளன.

இதய மருத்துவத் துறையில் காவேரி மருத்துவமனை, ஓசூர் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்து, மேம்பட்ட இதய சிகிச்சைக்கான முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

5,500+ கரோனரி ஆஞ்சியோகிராம் (CAG) பரிசோதனைகள்
4,500+ கரோனரி ஆஞ்சியோபிளாஸ்டி (PTCA) மற்றும் இதர கழனமான சிகிச்சைகள்
6 மாதங்களில் 150 இதய அறுவைச் சிகிச்சைகள்
Minimally Invasive மற்றும் எண்டோஸ்கோபிக் இதய அறுவை சிகிச்சைகள்
இதய வால்வு சார்ந்த இதய சிகிச்சைகள் மற்றும் மேம்பட்ட எலக்ட்ரோபிசியாலஜி சிகிச்சைகள்

காவேரி மருத்துவமனை, சாந்தி நகர், ஓசூர். 04344 272 727